## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபைச் சட்டம்

*[1993, நவெம்பர் மாதம் 12 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.

---

1993, நவெம்பர் மாதம் 12 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 1.50 தபாற் செலவு : ரூபா 1.[illegible]

# 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபைச் சட்டம்.

[1993, நவெம்பர் மாதம் 12 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]

ச. வ. — ஓ 62/91

**தேயிலை ஆராய்ச்சிச் சபையொன்றைத் தாபிப்பதற்கும் அதனுடன் தொடர்புபட்ட அல்லது அதன் இடைநேர்விளைவான கருமங்களுக்கு ஏற்பாடு செய்வதற்குமானதொரு சட்டம்.**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

**சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.**

1. இச்சட்டம் 1993 ஆம் ஆண்டின் 52 ஆம் இலக்க, தேயிலை ஆராய்ச்சிச் சபைச் சட்டம் என எடுத்துக்காட்டப்படலாமென்பதுடன், அமைச்சரானவர் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளைமூலம் நியமிக்கக் கூடியவாறான (இதனகத்துப்பின்னர் "நியமித்த தேதி" எனக் குறிப்பீடு செய்யப்படும்) அத்தகைய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

## பாகம் I

### தேயிலை ஆராய்ச்சிச் சபையைத் தாபித்தல்

**தேயிலை ஆராய்ச்சிச் சபையைத் தாபித்தல்.**

2. இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கிணங்க (இதனகத்துப்பின்னர் "சபை" எனக் குறிப்பீடு செய்யப்படும்) தேயிலை ஆராய்ச்சிச் சபை என அழைக்கப்படவேண்டிய சபையொன்று தாபிக்கப்படுதல் வேண்டும்.

**சபை கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டும்.**

3. (1) சபையானது, 2 ஆம் பிரிவினால் அதற்குக் குறித்தொதுக்கப் பட்ட பெயரைக்கொண்டு, இடையறா வழியுரிமையும் பொது இலச்சினை யொன்றையும் கொண்ட கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்றாதல் வேண்டு மென்பதுடன் அத்தகைய பெயர்கொண்டு அது வழக்குத் தொடுக்கலா மென்பதோடு அதற்கெதிராக வழக்குத் தொடுக்கவும்படலாம்.

(2) சபையின் தலைமையகம் தலவாக்கொல்லையில் அல்லது அமைச்சரின் அங்கீகாரத்துடன், சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வேறு இடத்தில் இருத்தல் வேண்டும்.

**சபையின் இலச்சினை.**

4. சபையின் இலச்சினையானது—

(அ) சபையினது தவிசாளரின் கட்டுக்காப்பில் இருத்தல் வேண்டும் ;

(ஆ) சபையினால் அங்கீகரிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வடிவில் அமைந்திருத்தல் வேண்டுமென்பதுடன் சபையினால் தீர்மானிக் கப்படக்கூடியவாறான அத்தகைய விதத்தில் மாற்றவும்படலாம் ; அத்துடன்

(இ) சபையின் விதிகளுக்கிணங்கத் தவிர ஆவணமெதிலும் பொறிக்கப் படுதலாகாது.

சபையின் பணிகள்.

5. சபையின் பணிகளாவன, தேயிலை பயிரிடுகை, உற்பத்தியில் ஆராய்ச்சியில் ஈடுபடுதல், அதனை ஊக்குவித்தல், வளர்த்தல் அத்துடன் அதற்கு வசதியளித்தல், அத்துடன் குறிப்பாக—

(அ) தேயிலையைப் பாதிக்கும் பீடைகளைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், தேயிலையைப் பாதிக்கும் நோய்களைத் தடுத்தல், கட்டுப்படுத்தல், தேயிலையின் தரத்தை மேம்படுத்துதல் உட்பட, தேயிலைத் தயாரிப்பு, உற்பத்தியைத் தொட்டுநிற்கும் சகல பிரச்சினைகள் மீதும் விடயங்கள்மீதும் அறிவியல்சார் தொழில்நுட்பம்சார் ஆராய்ச்சியையும் பரிசோதனைகளையும் நடாத்துதல், நடாத்த உதவுதல், ஊக்கமளித்தல் அத்துடன் அத்தகைய ஆராய்ச்சிப் பெறுபேறுகளை அது தன் தற்றுணிபில் பரப்புதலும் வெளியிடுதலும் ;

(ஆ) இலங்கையில் தேயிலைக் கைத்தொழிலிலான எதிர்காலப் போக்குகள் உட்பட அதன் பொருளாதார அனுகூலச் சாத்தியம் பற்றிய ஆராய்ச்சியை நடாத்துதல், அதற்கு உதவுதலும் ஊக்குவித்தலும் ;

(இ) சபையின் விதிகளுக்கிணங்க தலவாக்கொல்லையில் அமைந்திருக்கும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தையும் அதன் உபநிலையங்களையும் பேணுதலும் நிருவகித்தலும் ;

(ஈ) இலங்கையிலும் இலங்கைக்கு வெளியேயும் ஆராய்ச்சி நிறுவனங்களுடன் தொடர்புகளைத் தாபித்தலும் அவற்றைப் பேணுதலும்;

(உ) அதன் பணிகளை நிறைவேற்றுகையில் வெளிநாட்டு ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் இலங்கையில் உள்ள ஆராய்ச்சி நிறுவனங்களுடனும் கூட்டுப் படிப்புத் திட்டங்கள், கருத்தரங்குகள் அல்லது ஆய்வரங்குகள் என்பவற்றை நடாத்துதல்.

சபையின் தத்துவங்கள்.

6. சபையானது, அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய தத்துவங்களைக் கொண்டிருத்தல் வேண்டுமென்பதுடன் குறிப்பாக பின்வரும் எல்லாவற்றையும் அல்லது அவற்றுள் எதனையும் செய்வதற்கு தத்துவத்தைக் கொண்டிருத்தலும் வேண்டும்:—

(அ) ஏதேனும் குத்தகை, கொள்வனை, கொடை, நன்கொடை மரணசாதனக் கையளிப்பு வகையாக அல்லது வேறு வகையாக அதற்கு உரித்தாக்கப்படக்கூடிய அசைவுள்ள அல்லது அசைவற்ற ஆதனத்தைக் கொள்ளுதலும் வைத்திருத்தலும் அத்துடன் சபையின் விதிகளுக்கமைவாக அவற்றைக் குத்தகைக்குக் கொடுத்தல், விற்றல், குறித்தொதுக்குதல், கொடுத்துமாற்றுதல் அல்லது வேறுவகையாகக் கையுதிர்த்தல்;

(ஆ) ஏதேனும் வங்கியில் அல்லது எவையேனும் வங்கிகளில் நடப்பு, சேமிப்பு அல்லது வைப்புக் கணக்குகளைத் திறத்தலும் பேணுதலும்;

(இ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்குப் பயன்படுத்தப்படக் கூடிய ஏதேனும் கண்டுபிடிப்புத் தொடர்பாக ஏதேனும் தகவலைப் பயன்படுத்துவதற்கு அல்லது விற்பனை செய்வதற்குள்ள பிரத்தியேகமான அல்லது பிரத்தியேகமற்ற அல்லது வரையறுக்கப்பட்ட உரிமையை அளிக்கும் எவையேனும் ஆக்க உரிமைகள் புத்தாக்கப் புனைவுகளை அல்லது சலுகைகளைப் பெற விண்ணப்பித்தல், கொள்வனவுசெய்தல் அல்லது வேறு வகையாகக் கொள்ளுதல் அல்லது அத்தகைய பணிகளை நிறைவேற்றுவதனை வசதி செய்யக்கூடிய அத்தகைய எதனையும் கொள்ளுதலும் அவ்வாறு கொள்ளப்பட்ட ஆதன உரிமைகளையும் தகவலையும் பயன்படுத்தல், அபிவிருத்திசெய்தல், அல்லது அவை தொடர்பில் உரிமங்களை வழங்குதல்;

(ஈ) ஆராய்ச்சி நோக்கங்களுக்காகப் பரிசோதனை நிலையங்களைத் தாபித்தலும் பேணுதலும் அத்தகைய ஆராய்ச்சிக்கு அவசியமாகக் கூடியவாறான சார்பொருட்கள், துணைப்பொருட்கள் அல்லது சாதனங்களை அத்தகைய நிலையங்களுக்குப் பொருத்துதல்;

(உ) ஆராய்ச்சிக்காகவும் தொடர்புபட்ட நோக்கங்களுக்காகவும் தேயிலைத் தோட்டங்களையும் தேயிலைத் தொழிற்சாலைகளையும் பேணுதலும் முகாமை செய்தலும்;

(ஊ) அதன் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகளைக் கடனெடுத்தல் ;

(எ) ஆளணியினரைப் பரிமாற்றிக் கொள்வதற்காகவும், ஆராய்ச்சி மற்றும் மதியுரைச் சேவைகளுக்கென ஆளணியினரைப் பயிற்றுவிப்பதற்காகவும், அத்துடன் பொதுவாக அவர்களின் பொதுக் குறிக்கோள்களை மேம்படுத்துவதில் அமையக்கூடியவவாறான அத்தகைய நோக்கங்களுக்காக, முழுமையாக அல்லது பகுதியளவில் சபையின் குறிக்கோள்களையொத்த நோக்கங்களைக் கொண்ட இலங்கையிலுள்ள அல்லது வெளிநாட்டிலுள்ள கல்விசார் அல்லது வேறு நிறுவனங்களுடன் ஒத்துழைப்புக்கான உடன்படிக்கைகளைச் செய்து கொள்ளுதல்;

(ஏ) அமைச்சரினதும், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரினதும் அங்கீகாரத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிணையங்களில் அதன் நிதிகளை முதலீடு செய்தல்;

(ஐ) தேயிலை நடுகையிலும், உற்பத்தியிலும் ஈடுபடும் ஆட்களுக்கு மதியுரை, செய்துகாட்டல், பெருந்தோட்டங்களைப் பார்வையிடுதல், பகுப்பாய்தல் வாயிலாகச் செய்முறை உதவியளித்தல்;

(ஒ) விதித்துரைக்கப்பட்டவொரு கட்டணக்கொடுப்பனவின்மீது அல்லது கட்டணமின்றி, பார்வையிடுதல், தகவலளித்தல், அறிக்கையிடுதல் என்பன உட்பட்ட சேவைகளை செய்தல்;

(ஓ) சபையின் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமாகக்கூடிய வாறான அத்தகைய அலுவலர்கள், சேவையாளர்கள் அல்லது முகவர்கள் என்போரை நியமித்தல், தொழிலுக்கமர்த்துதல் அவர்களுக்கு ஊதியமளித்தல், அவர்கள்மீது ஒழுக்காற்றுக் கட்டுப்பாட்டைப் பிரயோகித்தல், அவர்களைப் பதவியகற்றுதல்;

(ஔ) இலங்கையிலிருந்தான அல்லது வெளியேயிருந்தான மூலங்களி லிருந்து அசைவுள்ள அல்லது அசைவற்ற மானியக் கொடைகள், நன்கொடைகள், இறுதிவிருப்பாவனைக் கையளிப்புகளை ஏற்றுக் கொள்ளுதலும் அத்துடன் பெற்றுக் கொள்ளுதலும் அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவற்றைப் பிரயோகித்த லும்;

(க) சபையின் அலுவலர்களதும் சேவையாளர்களதும் நன்மைக்காக சகாய நிதியமொன்றை, அல்லது ஓய்வூதியத் திட்டங்களை, அல் லது மருத்துவத் திட்டங்களைத் தாபித்தலும், அத்தகைய ஏதேனும் நிதியத்திற்கு அல்லது திட்டத்திற்கு உதவுதொகை களைச் செலுத்துதலும்;

(ங) அதன் பணிகளை நிறைவேற்றுவதற்கு அவசியமானவையான அத் தகைய ஒப்பந்தங்களையும் உடன்படிக்கைகளையும் செய்து கொள் ளல்; அத்துடன்

(ச) சபையின் முகாமை தொடர்பில் விதிகளை ஆக்குதல்.

## பாகம் II

### சபையின் அமைப்பு

சபையை அமைத்தல்.

7. (1) சபையானது —

(அ) பின்வரும் பதவிவழி உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண் டும் :—

(i) அப்போதைக்கு தலவாக்கொல்லை — தேயிலை ஆராய்ச்சிச் சபையின் பணிப்பாளராகப் பதவி வகிக்கும் ஆள் ;

(ii) ஆயிரத்துத் தொளாயிரத்து எழுபத்தைந்தாம் ஆண்டின் 35 ஆம் இலக்க, தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத் திச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட தேயிலைச் சிறுபற்று நிலங்கள் அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளராக அப்போதைக்குப் பதவி வகிக்கும் ஆள் ; அத்துடன்

(ஆ) பின்வரும் பெயர்குறித்து நியமிக்கப்படும் உறுப்பினர்கள் :—

(i) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்படுபவரான அவ்வமைச்சரது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(ii) பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற் குப் பொறுப்பான அமைச்சரால் நியமிக்கப்படுபவரான அவ்வமைச்சரது அமைச்சின் பிரதிநிதி ஒருவர் ;

(iii) இலங்கைத் தேயிலைச் சபையின் தவிசாளரினல், அமைச்சரின் கலந்தாலோசனையுடன் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான அச் சபையின் பிரதிநிதி ஒருவர் ;

(iv) அறிவியல் துறையில் பிரபல்யம் பெற்றுள்ள ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான இரண்டு உறுப்பினர்கள் ;

(v) தேயிலைக் கைத்தொழிலில் அனுபவம் வாய்ந்தவரும் ஆற்றலுள்ளவருமான ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவர்களான இரண்டு உறுப்பினர்கள் ;

(vi) பெருந்தோட்ட முகாமை முகவர்களை அல்லது ஒப்பந்தக்காரர்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆட்களிடையேயிருந்து அமைச்சரால் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

(vii) அமைச்சரினல் ஒரு இலட்சம் உறுப்பினர்களுக்கு மேற்பட்ட உறுப்பினர்களைக் கொண்ட தொழிற்சங்கம் ஒவ்வொன்றினதும் நிறைவேற்றுநருடனை கலந்தாலோசனையுடன் அமைச்சரால் நியமிக்கப்பட்ட இரண்டு உறுப்பினர்கள்;

இப்பந்தியின் நோக்கத்திற்காக, தொழிற்சங்கம் ஒன்று தொடர்பில் "நிறைவேற்றுநர்" என்பது, தொழிற் சங்கங்கள் கட்டளைச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(2) அமைச்சரானவர், சபை உறுப்பினர்களுள் ஒருவரைச் சபையின் தவிசாளராகப் பெயர்குறித்து நியமித்தல் வேண்டும்.

(3) ஆளெவரும், அவர் இலங்கைப் பிரசையொருவராக இருந்தாலன்றி, சபையின் உறுப்பினரொருவராக நியமிக்கப்படுவதற்குத் தகைமையுடையவராதலாகாது.

8. (1) ஏழாம் பிரிவின் (1), (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினர் ஒருவர், அவரது பெயர்குறித்த, நியமனத்திலிருந்து கணக்கிடப்படும் மூன்றாண்டு காலப்பகுதியொன்றிற்குப் பதவி வகித்தல் வேண்டும். பதவிக்காலம்.

(2) அமைச்சரானவர், 7 ஆம் பிரிவின் (1), (ஆ) என்னும் பந்தியின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் எவரையும்—

(அ) அவர், தகுதிவாய்ந்த நீதிமன்றமொன்றினல் சித்த சுவாதீனம் அற்றவர் எனத் தீர்ப்பளிக்கப்பட்டிருப்பின், அல்லது

(ஆ) அவர், தகுதி வாய்ந்த நீதிமன்றமொன்றினல் கடனிறுக்க வலுவற்றவர் என்று அல்லது ஒழுக்கக்கேட்டை உட்படுத்தும் தவறொன்றுக்குக் குற்றங்காணப்பட்டுள்ளதாக வெளிப்படுத்தப்பட்டிருப்பின்,

பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) ஏழாம் பிரிவின் (1) (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான சபையின் உறுப்பினர் ஒருவர், அத்தகைய உறுப்பினரைப் பெயர்குறித்து நியமித்த ஆளுக்கு முகவரியிடப்பட்ட அஞ்சல் மூலம், எந்நேரத்திலும் அவரது பதவியைத் துறக்கலாம்.

(4) ஏழாம் பிரிவின் (1) (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான சபையின் உறுப்பினரெவரும், இறப்பு, பதவி துறத்தல் அல்லது பதவியிலிருந்து அகற்றப்படுகை மூலம் அல்லது வேறு வகையாகப் பதவியை வறிதாக்கியதன் விளைவாகச் சபை உறுப் பான்மையில் வெற்றிடம் ஒன்று ஏற்படும் பட்சத்தில், 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளைக் கருத்தில் கொண்டு, அத்தகைய வெற்றிடத்தை நிரப்பு வதற்கு வேறு ஆளொருவர் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(5) ஏழாம் பிரிவின் (1) (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட உறுப்பினரொருவரின் இறப்பினால், பதவி துறப் பினால் பதவியிலிருந்து அகற்றுகையினால் அல்லது வேறுவகையாக ஏற் பட்ட வெற்றிடமொன்றை நிரப்புவதற்கு வேறு ஆளொருவர் பெயர் குறித்து நியமிக்கப்படுமிடத்து, அவ்வாறு பெயர்குறித்து நியமிக்கப் பட்ட ஆள், சபையின் எந்த உறுப்பினரை அடுத்தமைந்தாரோ அந்த உறுப்பினரின் முடிவுறுதெஞ்சியுள்ள பதவிக்காலப்பகுதிக்குப் பதவி வகித்தல் வேண்டும்.

(6) ஏழாம் பிரிவின் (1) (ஆ) என்னும் பந்தியின் கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்டவரான சபையின் எவரேனும் உறுப்பினர், சுகவீனம், இயலாமை அல்லது மூன்று மாதங்களுக்குக் குறையாதவொரு காலப் பகுதிக்கு, இலங்கையில் இல்லாமை காரணமாக தற்காலிகமாக அவரது கடமைகளைப் புரிய இயலாதவராக இருக்குமிடத்து, 7 ஆம் பிரிவின் ஏற் பாடுகளைக் கருத்தில் கொண்டு, அவரது இடத்தில் செயலாற்றுவதற் கென வேறு ஆளொருவர் நியமிக்கப்படலாம்.

(7) சபையின் அடுத்தடுத்த மூன்று சாதாரண கூட்டங்களுக்கு வருகைதராத ஏழாம் பிரிவின் (1), (ஆ) என்னும் பந்தியின்கீழ் பெயர் குறித்து நியமிக்கப்பட்ட சபையின் உறுப்பினர் எவரும் அவரது பத வியை வறிதாக்கியவராகக் கருதப்படுதல் வேண்டும்.

**சபையின் தவிசாளர்.**

9. (1) தவிசாளரானவர் அமைச்சருக்கு முகவரியிடப்பட்ட கடிதம் மூலம் எந்த நேரத்திலும் தவிசாளர் பதவியிலிருந்து விலகிவிடலாம்.

(2) அமைச்சரானவர், தவிசாளரை எந்த நேரத்திலும் அதற்கான காரணம் எதனையும் குறித்தொதுக்காது, தவிசாளர் பதவியிலிருந்து அகற்றலாம்.

(3) தவிசாளரானவர் சுகவீனம் காரணமாக அல்லது இலங்கையில் இல்லாமையால் தமது பதவிக்குரிய கடமைகளைப் புரிவதற்கு தற்காலிக மாக இயலாதிருப்பின், அவரது இடத்தில் செயலாற்றுவதற்கென அமைச்சர், சபையின் வேறோர் உறுப்பினரைப் பெயர்குறித்து நியமிக் கலாம்.

(4) ஓராம், (2) ஆம் உட்பிரிவுகளின் ஏற்பாடுகளுக்கமைவாக, தவிசாளரின் பதவிக்காலம் சபையின் உறுப்பாண்மைக் காலப்பகுதியா தல் வேண்டும்.

சபையின் கூட்டங்கள்.

10. (1) சபையின் எல்லாக் கூட்டங்களுக்கும் தவிசாளர் தலைமை தாங்குதல் வேண்டும். சபையின் ஏதேனும் கூட்டத்திற்குத் தவிசாளர் வருகைதாராதுவிடின், அத்தகைய கூட்டத்திற்கு வருகைதந்த சபையின் உறுப்பினர்களால் தெரிவுசெய்யப்பட்ட உறுப்பினர் ஒருவர் அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்குதல் வேண்டும்.

(2) சபையின் கூட்டமெதிலும் வாக்குகள் சரிசமனாயிருக்கும் பட்சத்தில், தவிசாளர் அல்லது அத்தகைய கூட்டத்திற்குத் தலைமைதாங்கும் உறுப்பினர் தனது வாக்குடன் மேலதிகமாக அறுதியிடும் வாக்கொன்றைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(3) சபையானது, இச்சட்டத்தினால் சபைக்கு அளிக்கப்பட்ட அல்லது சபைமீது சுமத்தப்பட்ட அல்லது அதற்குக் குறித்தொதுக்கப்பட்ட தத்துவம் கடமை அல்லது பணி எதனையும் தவிசாளருக்குக் கையளிக்கலாம்.

(4) சபையின் கூட்டங்கள் தவிசாளரினால் கூட்டப்படுதல் வேண்டும் என்பதுடன், இச்சட்டத்தின்கீழ் சபையின் பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்கு அவசியமாகக்கூடியவாறாக அடிக்கடி அவை நடாத்தப்படுதலும் வேண்டும்.

(5) கூட்டம் ஒன்றுக்கான கூட்ட நடப்பெண் ஐந்து ஆதல் வேண்டும்.

(6) சபையின் உறுப்பினர்களுக்கு, நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், அமைச்சரால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்திலும் அத்தகைய வீதங்களிலும் ஊதியமளிக்கப்படுதல் வேண்டும்.

(7) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைவாக கூட்டங்களை நடாத்துதல், அத்தகைய கூட்டங்களில் அலுவல்களைக் கொண்டுநடாத்தல் தொடர்பாகப் பின்பற்றப்படவேண்டிய நடவடிக்கை முறையை ஒழுங்குபடுத்துகின்ற ஒழுங்குவிதிகள் ஆக்கப்படலாம்.

(8) சபையானது, அதன் தத்துவங்களைப் பிரயோகித்தலிலும், அதன் கடமைகளைப் புரிதலிலும், அதன் பணிகளை நிறைவேற்றுதலிலும் காலத்திற்குக் காலம் அமைச்சர் வழங்கக்கூடியவாறான அத்தகைய பணிப்புகளுக்கு அமைவாகவும், அவற்றிற்கு இணங்கவும் இருத்தல் வேண்டும்.

சபையின் நடவடிக்கைகள் உறுப்பினர் ஒருவரின் பெயர் குறித்த நியமனத்தில் ஏதேனும் வெற்றிடம் அல்லது குறைபாடு இருப்பது காரணமாக வலிதற்றதாதலாகாது.

11. சபையானது, அதன் உறுப்பாண்மையில் வெற்றிடம் ஏதேனும் இருப்பது எவ்வாறிருப்பினும், 10 ஆம் பிரிவின் (5) ஆம் உட்பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக செயலாற்றுவதற்குத் தத்துவம் கொண்டிருத்தல் வேண்டும் ; அத்துடன் சபையின் செயல் அல்லது நடவடிக்கை எதுவும், அதன் உறுப்பினர் ஒருவரின் பெயர்குறித்து, நியமனத்தில் அத்தகைய ஏதேனும் வெற்றிடம் அல்லது ஏதேனும் குறைபாடு இருக்கின்றமை காரணமாக மாத்திரம் வலிதற்றதாதலாகாது.

1**—ம 028803— (93/08)

## பாகம் III

### பணிப்பாளரின் தத்துவங்களும் பணிகளும்

பணிப்பாளர்.

12. பிரிவு 7(1) (அ) (i) என்பதில் குறிப்பீடு செய்யப்பட்டுள்ளவரான தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் பணிப்பாளரானவர் —

(அ) சபையின் பொதுப்பணிப்புக்கும் கட்டுப்பாட்டுக்கும் அமைவாக நிறுவகத்தின் அலுவல்களின் நிருவாகத்திற்கு பொறுப்பாதல் வேண்டும்;

(ஆ) சபையினால் அவருக்குக் கையளிக்கப்படக்கூடியவாறான, சபையின் எவையேனும் அத்தகைய தத்துவங்கள், பணிகள் அத்துடன் கடமைகளைப் பிரயோகித்தலும், புரிதலும் அத்துடன் நிறைவேற்றுதலும் வேண்டும்.

## பாகம் IV

### நிதி

ஏற்றுமதி செய்யப்படும் தேயிலை மீதிலான அறவீடு.

13. (அ) நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன், அமைச்சரால் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் நிருணயிக்கப்படக்கூடியவாறான அத்தகைய வீதத்தில் கணிக்கப்பட்டதொரு ஆயவரி, இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படும் ஒவ்வொரு கிலோகிராம் தேயிலை மீதும் விதிக்கப்படுதலும் அறவிடப்படுதலும் அத்துடன் செலுத்தப்படுதலும் வேண்டும்:

ஆயின், மீள ஏற்றுமதி செய்யும் நோக்கத்திற்காக இலங்கைக்குள் இறக்குமதி செய்யப்பட்டது என சுங்கப்பணிப்பாளர் தலைமையதிபதியின் திருப்திக்கு எண்பிக்கப்பட்டுள்ள தேயிலை எதன் மீதும் அத்தகைய ஆயவரி எதுவும் விதிக்கப்படுதலோ அல்லது அறவிடப்படுதலோ ஆகாது.

(ஆ) இப்பிரிவின் கீழ் விதிக்கப்பட்ட ஆயவரி நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் ஆலோசனையுடன் கசெற்றில் வெளியிடப்படும் கட்டளை மூலம் அமைச்சரால் வேறுபடுத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம்.

(இ) இப்பிரிவின் கீழ் அமைச்சரால் ஆக்கப்படும் ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் அது கசெற்றில் வெளியிடப்படும் தேதியன்று அல்லது அதனகத்துக் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதல் வேண்டுமென்பதுடன், கசெற்றில் வெளியிடப்பட்ட தேதியிலிருந்து நான்கு மாதங்களுக்குள்ளாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்கொணரப்படுதலும் வேண்டும். அவ்வாறு அங்கீகரிக்கப்படாததான அத்தகைய கட்டளை எதுவும், அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து ஆனால் அதன் கீழ் முன்னர் செய்யப்பட்ட எதனதும் வலிதுடைமைக்குப் பங்கமின்றி இல்லாதொழிக்கப்பட்டதாகக் கருதப்படுதல் வேண்டும். எந்தத் தேதியன்று அத்தகைய ஏதேனும் கட்டளை இல்லாதொழிக்கப்பட்டதோ அந்தத் தேதி கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

(ஈ) இப்பிரிவு, சுங்கக் கட்டளைச்சட்டத்தில் ஒரு பாகமாக அமைகிறது என்றாற்போலப் பயனுடையதாதல் வேண்டும் என்பதுடன், அக்கட்டளைச் சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்க ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(உ) இப்பிரிவின் கீழ் அறவிடப்படும் ஆயவரியின் வரும்படிகள் சுங்கப் பணிப்பாளர் தலைமையதிபதியினால் மாதந்தோறும், 14ஆம் பிரிவினால் தாபிக்கப்படும் தேயிலை ஆராய்ச்சி நிதியத்தின் வரவுக்குச் செலுத்தப் படுதல் வேண்டும். அத்தகைய கொடுப்பனவு ஒவ்வொன்றும் ஆதாரப்படுத் தும் ஆவணங்களுடன் சேர்த்துச் செலுத்தப்படுதல் வேண்டும்.

(ஊ) இப்பிரிவின் கீழ், தேயிலை மீது விதிக்கப்படும் ஆயவரியானது, எழுத்திலான வேறேதேனும் சட்டத்தின்கீழ் தேயிலை மீது அறவிடப் படும் ஏதேனும் ஏற்றுமதித் தீர்வைக்கு அல்லது ஆயவரிக்கு மேலதிக மானதாக இருத்தல் வேண்டும்.

14. (1) இதனகத்துப்பின்னர் நிதியம் என அழைக்கப்பட வேண்டிய தேயிலை ஆராய்ச்சி நிதியம் ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டும். சபையின் நிதியம்.

(2) பின்வருவன நிதியத்திற்குச் செலுத்தப்படுதல் வேண்டும்:—

(அ) இச்சட்டத்தின்கீழ் சபையானது அதன் தத்துவங்கள், கடமை கள் அத்துடன் பணிகளைப் பிரயோகிக்கையிலும், புரிகையிலும் அத்துடன் நிறைவேற்றுகையில் அதனால் பெற்றுக் கொள்ளக் கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(ஆ) இலங்கையிலிருந்தாயினுஞ்சரி, வெளிநாடுகளிலிருந்தாயினுஞ்சரி ஏதேனும் மூலத்திலிருந்து மானியக் கொடைகள், நன்கொடை கள், இறுதிவிருப்பாவணக் கையளிப்பு வாயிலாகப் பெற்றுக் கொள்ளப்படக்கூடியவாறான அத்தகைய பணத்தொகைகள்;

(இ) 13ஆம் பிரிவின் கீழ் தேயிலை மீதிலான ஆயவரி வரும் படிகள்.

(3) இச்சட்டத்தின் கீழ், சபையின் தத்துவங்களை, கடமைகளை, அத்து டன் பணிகளைப் பிரயோகித்தலில் புரிதலில் அத்துடன் நிறைவேற்றுத லில் அதனால் உறப்படும் ஏதேனும் செலவினத்தைக் கொடுத்துத் தீர்க்கும் நோக்கத்திற்காகச் சபையினால் அதிகாரமளிக்கப்படக்கூடியவாறான எல் லாப் பணத்தொகைகளும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண் டும்.

15. (1) சபையானது, அதன் வருமானம் மற்றும் செலவினம், அதன் சொத்துக்களும் பொறுப்புக்களும் அத்துடன் வேறு எல்லாக் கொடுக்கல் வாங்கல்கள் பற்றிய செவ்வையான கணக்குகளை வைத்திருக்கச் செய்வித் தல் வேண்டும். கணக்குகளைக் கணக்காய்வு செய்தல்.

(2) சபையின் நிதியாண்டு பஞ்சாங்க ஆண்டாதல் வேண்டும்.

(3) கணக்காய்வாளர் தலைமை அதிபதியானவர் சபையின் கணக்குகளை ஒவ்வோர் ஆண்டும் கணக்காய்வு செய்தல் வேண்டும். அத்தகைய கணக்கு களைக் கணக்காய்வு செய்வதில் அவருக்கு உதவுவதற்காக, கணக்காய்வா ளர் தலைமையதிபதி எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளரின் சேவைகளைப் பெறலாம்; அக்கணக்காய்வாளர் அவரது பணிப்பின்கீழும் கட்டுப்பாட்டின் கீழும் செயலாற்றுதல் வேண்டும்.

(4) சபையின் கணக்குகளைக் கணக்காய்வு செய்வதில் அவரால் உறப்பட்ட செலவுகளைச் சமாளிக்கும் நோக்கத்திற்காகக் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய ஊதியம் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும். கணக்காய்வாளர் தலைமையதிபதியினால் பெற்றுக் கொள்ளப்படும் ஊதியம் எதுவும், அத்தகைய கணக்காய்வை நடாத்தும் நோக்கத்திற்காக அவரால் தொழிலில் அமர்த்தப்படும் எவரேனும் தகைமைபெற்ற கணக்காய்வாளருக்கு அல்லது கணக்காய்வாளர்களுக்குச் செலுத்தப்பட்ட எவையேனும் பணத்தொகைகளை அதிலிருந்து கழித்தபின் திரட்டு நிதியத்திற்கு வரவு வைக்கப்படுதல் வேண்டும்.

(5) கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர், ஒவ்வோர் ஆண்டின் திசெம்பர் முப்பத்தோராம் தேதிக்குப் பின்னர் சாத்தியமான அளவு விரைவாக சபையின் வருமானம் செலவினம் பற்றியதும், அந்த ஆண்டின் போது சபைக்குச் சேர்மதியான பணங்களின் முதலீடு பற்றியதுமான கூற்றையும் சேர்த்து அவ்வாண்டின்போது சபையின் அலுவல்களின் நிருவாகம் பற்றிய ஓர் அறிக்கையையும் தயாரித்தல் வேண்டும்.

(6) இப்பிரிவில் "தகைமை பெற்ற கணக்காய்வாளர்" என்ற சொற்றொடர்—

(அ) இலங்கையின் வரைவு பெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறேதேனும் நிறுவகத்தின் உறுப்பினராகவிருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில் புரியவென, அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழொன்றை உடையவரான ஆள் ஒருவர் எனப் பொருளாகும்; அல்லது

(ஆ) எந்தக் கணக்காளர் குழுமமொன்றின் ஒவ்வொரு வதிவுள்ள பங்காளரும் இலங்கையின் வரைவுபெற்ற கணக்காளர் நிறுவகத்தின் அல்லது சட்டத்தினால் தாபிக்கப்பட்ட வேறு ஏதேனும் நிறுவகத்தின் உறுப்பினர் ஒருவராகவிருப்பதோடு கணக்காளர் ஒருவராகத் தொழில்புரியவென அத்தகைய நிறுவகத்தின் பேரவையினால் வழங்கப்பட்ட சான்றிதழ் ஒன்றை உடையவராகவும் இருக்கின்றாரோ அந்தக் கணக்காளர் குழுமம் ஒன்று எனப் பொருளாகும்.

*கணக்காய்வாளர் தலைமையதிபதியின் கூற்றும் அறிக்கையும் பாராளுமன்றத்தின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும்.*

16. கணக்காய்வாளர் தலைமையதிபதியானவர் 15 ஆம் பிரிவைப் பின்பற்றி அவரால் தயாரிக்கப்பட்ட அறிக்கையை பெருந்தோட்டக் கைத்தொழில்கள் என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். அவர் அத்தகைய அறிக்கையையும் கூற்றையும் பாராளுமன்றத்தின் முன்பு சமர்ப்பிக்கச் செய்தல் வேண்டும்.

*வரிகளிலிருந்தான விலக்களிப்பு.*

17. அமைச்சரானவர், நிதி என்னும் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரின் கலந்தாலோசனையுடன், சபையின் பயன்பாட்டிற்காக அச்சபையினால் இறக்குமதி உரிமம் ஒன்றின் மீது இறக்குமதி செய்யப்பட்ட பொருட்கள் தொடர்பில் அறவிடப்படத்தக்கனவான எவையேனும் விதிப்பனவுகளை விட்டுவிடலாம்.

## பாகம் V

### நானாவிதமானவை

18. (1) இச்சட்டத்தினால் எக்கருமங்கள் தொடர்பாக ஒழுங்கு விதிகள் ஆக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அல்லது அதிகாரமளிக்கப்படுகின்றனவோ அல்லது விதித்துரைக்கப்படவேண்டுமெனத் தேவைப்படுத்தப்படுகின்றனவோ அக்கருமங்கள் தொடர்பில் அமைச்சர் ஒழுங்குவிதிகளை ஆக்கலாம். ஒழுங்கு விதிகள்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழ் ஆக்கப்படும் ஒழுங்கு விதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டுமென்பதுடன், அத்தகைய வெளியீட்டுத் தேதியானது அல்லது அத்தகைய ஒழுங்குவிதியில் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய பிந்திய தேதியன்று நடைமுறைக்கு வருதலும் வேண்டும்.

(3) ஓராம் உட்பிரிவின் கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதி ஒவ்வொன்றும் கசெற்றில் வெளியிடப்பட்ட பின்னர் வசதியானளவு விரைவாக அங்கீகாரத்திற்காகப் பாராளுமன்றத்தின் முன்பு கொணரப்படுதல் வேண்டுமென்பதுடன், அவ்வாறு அங்கீகரிக்கப்படாததான ஏதேனும் ஒழுங்கு விதியானது, அத்தகைய அங்கீகாரம் மறுக்கப்பட்ட தேதியிலிருந்து பயனுறுவதாக அதன் கீழ் முன்னர் சொல்லப்பட்ட எதற்கும் பங்கமின்றி, நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

(4) எந்தத் தேதியன்று ஏதேனும் ஒழுங்குவிதி நீக்கப்பட்டுவிட்டதாகக் கருதப்படுகின்றதோ அந்தத் தேதி பற்றிய அறிவித்தல் கசெற்றில் வெளியிடப்படுதல் வேண்டும்.

19. (1) இச்சட்டத்தின் கீழ் சபையில் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக சபைக்கெதிராக வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் அமைவதாதலாகாது. சபைக்கு அல்லது அலுவலருக்கு அல்லது சேவையாளர் முதலியோருக்கெதிராக குறித்தசில சந்தருப்பங்களில் வழக்கோ வழக்கு நடவடிக்கையோ அமையாது.

(2) இச்சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மேல் சபையின் எவரேனும் உறுப்பினரால், அலுவலரால், சேவையாளரால் அல்லது முகவரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயலுக்காக அவருக்கெதிராக வழக்கு அல்லது வழக்கு நடவடிக்கை எதுவும் அமைவதாதலாகாது.

(3) ஏதேனும் நீதிமன்றத்தில் சபையினால் அல்லது சபைக்கு எதிராகக் கொணரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் சபையினால் உறப்பட்ட செலவு எதுவும் நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஏதேனும் வழக்கில் அல்லது

வழக்கு நடவடிக்கையில் சபைக்குச் செலுத்தப்படும் அல்லது அதனால் அறவிடப்படும் ஏதேனும் செலவு தொகைகள் நிதியத்தில் வரவு வைக்கப்படுதலும் வேண்டும்.

(4) இரண்டாம் உட்பிரிவில் குறிப்பிடு செய்யப்பட்டவாறாக இச் சட்டத்தின் கீழ் அல்லது சபையின் பணிப்பின் மீது அத்தகைய எவரேனும் ஆளினால் செய்யப்பட்ட அல்லது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டதாகக் கருதப்பட்ட ஏதேனும் செயல் தொடர்பாக ஏதேனும் நீதிமன்றத்தின் முன்பு அவருக்கெதிராகக் கொண்டுவரப்பட்ட ஏதேனும் வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் அத்தகைய ஆளெவரினாலும் உறப்பட்ட செலவு எதுவும் நீதிமன்றமானது, அச்செயல் அவ்வாறு நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டதென அல்லது செய்யப்பட்டதாகக் கருதப்பட்டதென்று கொண்டால், அத்தகைய வழக்கில் அல்லது வழக்கு நடவடிக்கையில் அவரால் அத்தகைய செலவினம் அறவிடப்பட்டாலொழிய சொல்லப்பட்ட நிதியத்திலிருந்து செலுத்தப்படுதல் வேண்டும்.

சபையின் பணியாட்டொகுதிக்குப் பகிரங்க அலுவலர்களை நியமித்தல்.

20. (1) சபையின் வேண்டுகோளின் பேரில் பகிரங்க சேவையிலுள்ள அலுவலர் எவரும் அவ்வலுவலரினதும், அத்துடன் பொதுநிருவாகம் என்னும் விடயத்திற்குப் பொறுப்பாகவுள்ள அமைச்சரின் அமைச்சுச் செயலாளரினதும் சம்மதத்துடன், அதையொத்த சம்மதத்துடன் சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய காலப்பகுதிக்கு சபையின் பணியாட்டொகுதிக்கு தற்காலிகமாக நியமிக்கப்படலாம் அல்லது அதையொத்த சம்மதத்துடன் நிரந்தரமாக நியமிக்கப்படலாம்.

(2) சபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலரொருவர் தற்காலிகமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைகள் சட்டத்தின் 13(2) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அத்துடன் அவர் தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(3) சபையின் பணியாட்டொகுதிக்கு பகிரங்க அலுவலர் ஒருவர் நிரந்தரமாக நியமிக்கப்படுமிடத்து, 1978 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, போக்குவரத்துச் சபைகள் சட்டத்தின் 13(3) ஆம் பிரிவின் ஏற்பாடுகள் அவருக்கும் அத்துடன் அவர் தொடர்பாகவும் ஏற்புடைத்தாதல் வேண்டும்.

(4) சபையானது ஒரு விதித்துரைக்கப்பட்ட காலத்துக்கு அரசாங்கத்துக்குச் சேவையாற்ற உடன்பட்டு ஒப்பந்தமொன்றை அரசாங்கத்துடன் செய்துள்ள ஆளொருவரைத் தொழிலுக்கமர்த்துமிடத்து, அவ்வாளினால் சபைக்கு ஆற்றப்படும் ஏதேனும் சேவைக்காலம், அத்தகைய ஒப்பந்தத்தின் கீழ் அத்தகைய ஆளின் கடப்பாட்டைத் தீர்க்கும் நோக்கத்துக்காக அரசாங்கத்துக்கு ஆற்றப்படும் சேவையாகக் கருதப்படுதல் வேண்டும்.

21. சபையின் எல்லா அலுவலர்களும், சேவையாளர்களும் தண்டனைச் சட்டக்கோவையின் கருத்தெல்லைக்குள்ளும் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க சேவையாளராகக் கருதப்படுதல் வேண்டும். சபையின் அலுவலர்களும் சேவையாளர்களும் பகிரங்க சேவையாளர்களாகக் கருதப்படுதல்.

22. இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் சபையானது ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாகக் கருதப்படுதல் வேண்டுமென்பதுடன் அச்சட்டத்தின் ஏற்பாடுகள் அதற்கிணங்கப் பொருள் கொள்ளப்படுதலும் வேண்டும். சபையானது இலஞ்சச் சட்டத்தின் கருத்தெல்லைக்குள் ஓர் அட்டவணைப்படுத்தப்பட்ட நிறுவனமாதல்.

23. (1) சபையானது இச்சட்டத்தின் கீழான பணிகளை நிறைவேற்றும் நோக்கத்திற்காக சபையினால் தீர்மானிக்கப்படக்கூடியவாறான அத்தகைய கருமங்கள் தொடர்பிலும், அத்தகைய வடிவத்திலும் அத்தகைய விபரத்திரட்டுக்களையும் தகவல்களையும் சபைக்குக் கொடுத்துதவும்படி அனைவரையும் தேவைப்படுத்தலாம். விபரத்திரட்டுகள்.

(2) எந்த ஆள் —

(அ) ஓராம் உட்பிரிவின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட தேவைப்பாடு எதற்கும் அமைவாக ஏதேனும் விபரத்திரட்டை அல்லது தகவல்களைக் கொடுத்துதவத் தவறுகின்றாரோ;

(ஆ) ஓராம் உட்பிரிவின் கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட எவையேனும் தேவைப்பாடுகளுக்கு அமைய அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் அறிந்துகொண்டே பொய்க்கூற்று எதனையும் செய்கின்றாரோ; அல்லது

(இ) ஓராம் உட்பிரிவின்கீழ் அவர் மீது சுமத்தப்பட்ட ஏதேனும் தேவைப்பாட்டுக்கு அமைய அவரால் கொடுத்துதவப்பட்ட ஏதேனும் விபரத்திரட்டில் அல்லது தகவலில் ஏதேனும் கருமத்தை வேண்டுமென்றே விட்டுவிடுகின்றாரோ,

அந்த ஆளெவரும் இச் சட்டத்தின்கீழ் தவறொன்றுக்குக் குற்றவாளியாதல் வேண்டுமென்பதுடன் நீதிவானொருவர் முன்னிலையிலான சுருக்கமுறை விளக்கத்தின் பின் குற்றத்தீர்ப்பளிக்கப்பட்டதன்மேல் ஐயாயிரம் ரூபாவை விஞ்சாத குற்றப்பணமொன்றுக்கு ஆளாதலும் வேண்டும்.

நிலைமாறுகால ஏற்பாடுகள்.

24. (1) இலங்கைத் தேயிலைச் சபைக்கு உரித்தாக்கப்பட்டவையும் (இப்பிரிவில், "தேயிலை ஆராய்ச்சி நிறுவகம்" எனக் குறிப்பீடு செய்யப் படும்) இலங்கைத் தேயிலைச் சபையினால் பேணப்பட்டு வரும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் நோக்கங்களுக்காக நியமிக்கப்பட்ட தேதிக்கு நேர்முந்திய நாளன்று பயன்படுத்தப்பட்டவையுமான அசைவுள்ள அத்துடன் அசைவற்ற எல்லா ஆதனமும் நியமித்த சபைக்கு உரித்தாக்குதல் வேண்டும்.

(2) நியமித்த தேதிக்கு நேர்முந்திய நாளன்று உளதாயிருக்கின்றன வும் தேயிலை ஆராய்ச்சி நிறுவகத்தின் நோக்கங்களுக்காக இலங்கைத் தேயிலைச் சபையினால் அல்லது தேயிலைச் சபையுடன் செய்துகொள்ளப் பட்டனவும் ஆன எல்லா ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் அத்துடன் தேயிலை ஆராய்ச்சி நிறுவகம் தொடர்பாக இலங்கைத் தேயிலைச் சபையால் உறப்பட்டதும் ஆன எல்லா பொறுப்புக்களும் நியமித்த தேதியிலிருந்து சபையினால் அல்லது சபையுடன் கொள்ளப்பட்ட ஒப்பந்தங்களும் உடன்படிக்கைகளும் பொறுப்புக்களுமாகக் கருதப்படுதல் வேண்டும்; அத்துடன் அதற்கிணங்க அவை வலுவுக்கு இடப்படுதல் வேண்டும்.

(3) தேயிலை ஆராச்சி நிறுவகம் தொடர்பாக இலங்கைத் தேயிலை சபையினால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்டனவும் நியமித்த தேதிக்கு முந்திய நாளன்று முடிவுறாதிருப்பனவுமான எல்லா வழக்கு களும் வழக்கு நடவடிக்கைகளும் சபையால் அல்லது சபைக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்குகள் அல்லது வழக்கு நடவடிக்கைகள் எனக் கருதப்படல் வேண்டுமென்பதுடன், அதற்கிணங்கத் தொடர்ந்து நடாத்தவும்படலாம்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

25. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.

பொருள் கோடல்.

26. இச்சட்டத்தில் சந்தருப்பம் வேறுவகையாகத் தேவைப்படுத்தினாலன்றி —

"தவிசாளர்" என்பது 7(2) ஆம் பிரிவின் கீழ் பெயர்குறித்து நியமிக்கப்பட்டவரான சபையின் தவிசாளர் என்று பொருள்படும்;

"இலங்கைத் தேயிலைச் சபை" என்பது 1975 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, இலங்கைத் தேயிலைச் சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட இலங்கைத் தேயிலைச் சபை என்று பொருள்படும்; அத்துடன்

"தயாரிக்கப்பட்ட தேயிலை", "தேயிலை", "தேயிலைத் தொழிற்சாலை", "தேயிலைச் செடி" என்னும் சொற்றொடர்கள் 1957 ஆம் ஆண்டின் 51 ஆம் இலக்க, தேயிலைக் கட்டுப்பாட்டுச் சட்டத்தினால் அவற்றிற்குக் குறித்தொதுக்கப்பட்ட அவ்வவற்றிற்குரிய பொருளைக் கொண்டிருத்தல் வேண்டும்.